3401

Register Number | | | | | |

# தமிழ் — முதல் தாள்

## ( செய்யுள், உரைநடை )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் III க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஏழனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. $7 \times 2 = 14$

1. நாமக்கல் கவிஞருக்கு நடுவணரசு செய்த சிறப்பு யாது ?
2. வாழ்வார், வாழாதவர் யாவர் ?
3. 'போதிலார் திருவினாள்' – விளக்குக.
4. 'சீதையே எனத் தெரிந்த அனுமனின் மகிழ்ச்சியைக்' கம்பர் எவ்வாறு கூறியுள்ளார் ?
5. கடல் புதல்வியாய் யாரைப் பெற்றுள்ளது ?
6. பிள்ளைத் தமிழ் – இலக்கணம் கூறுக.
7. தொன்னையுள்ளம் – எது ?
8. சுற்றுப்புறத்தைக் காக்க எதனைத் தவிர்த்திடுவோம் எனக் கவிஞர் பூங்கோவன் குறிப்பிடுகிறார் ?
9. நம்மாழ்வாரின் படைப்புகள் யாவை ?

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக. $5 \times 4 = 20$

10. திரு. வி. க. வேண்டுவன யாவை ?
11. பகைவர் அரணின் புறத்திருப்பார் அதற்கான இடனறிதல் பற்றி வள்ளுவர் கூறுவதென்ன ?
12. செல்வத்தை அழிக்கும் படைகள் யாவை ?
13. திருந்திய திருடன் மற்றொரு திருடனிடம் கூறியவற்றை எழுதுக.
14. குறத்தி எந்தெந்த மலைகளைத் தன் உறவினர் மலைகளாகக் காட்டுகிறாள் ?
15. விண்மீன் கூட்டத்திற்குக் காட்டப்பட்ட உவமைகளைத் தொகுத்து எழுதுக.
16. 'வானகத் திருந்த சோதி வந்துசந் தித்த தேபோல்'

    – உவமையை விளக்கிப் பொருளொடு பொருத்துக.

[ Turn over

III. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக :

17. 'ஆரம்தாழ்ந்த .......' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக. 4

18. 'வசையிலா .......' எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக. 2

19. 'விடும்' என முடியும் குறட்பாவை எழுதுக. 2

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக : 1 × 8 = 8

20. சினத்தின் இயல்பையும் அதனை உடைமையாகக் கொள்வார்க்கு வரும் தீங்கினையும் தொகுத்தெழுதுக.

21. அனுமன் சீதையின் திறன்களை வியந்து மொழிந்தவற்றைத் தொகுத்தெழுதுக.

22. பாரதிதாசன் உலக ஒற்றுமை பற்றிக் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

23. பொருத்துக : 4 × 1 = 4

| | **ஆசிரியர்** | | **நூல்** |
|---|---|---|---|
| அ) | நம்மாழ்வார் | — | சீறாப்புராணம் |
| ஆ) | சமணமுனிவர் | — | திருவாய்மொழி |
| இ) | உமறுப்புலவர் | — | தேவாரம் |
| ஈ) | கண்ணதாசன் | — | திருப்பாமாலை |
| | | — | இயேசு காவியம். |

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : 6 × 1 = 6

24. சிலப்பதிகாரத்திலுள்ள காண்டங்கள் .................. .

அ) ஐந்து ஆ) மூன்று இ) ஆறு.

25. 'கிறித்தவக்கம்பர்' என்று புகழப்படுபவர் .................. .

அ) எச்.ஏ. கிருட்டினப்பிள்ளை

ஆ) வேதநாயகம் பிள்ளை

இ) சங்கரநாராயணப் பிள்ளை.

26. கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இட்ட பெயர் .................. .

அ) இராமர் சரிதம் ஆ) இராமாவதாரம் இ) இராமகாதை.

27. பாரத பூமி .................. .

அ) பழம்பெரும் பூமி ஆ) சிறந்த பூமி இ) புதிய பூமி.

28. கலம்பக உறுப்புகள் .................. .

அ) ஆறு ஆ) பன்னிரண்டு இ) பதினெட்டு.

29. சாகித்திய அகாடமி விருதுபெற்ற கண்ணதாசனின் நாவல் .................. .

அ) மாங்கனி ஆ) சேரமான் காதலி இ) அர்த்தமுள்ள இந்துமதம்.

VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. 5 × 2 = 10

30. இரகுநாத சேதுபதியின் அன்பில் வளர்ந்த புலவர்கள் யாவர் ?

31. சிதம்பரனாரின் வாக்கு வன்மைக்குச் சான்று தருக.

32. கலிலியோ கண்ட உண்மை யாது ?

33. திருநெல்வேலிச் சீமையின் சிறப்பு யாது ?

34. உள்வளத் திறமை என்பது யாது ?

35. மக்கள் எம்முயற்சியில் தலைப்பட வேண்டுமென திரு. வி. க. விழைகிறார் ?

36. பெரியாரின் சீரிய கருத்துக்கள் எவற்றைப் பயிரிட உதவுகின்றன ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** ஒவ்வொன்றிற்கும் *ஆறு* வரிகளில் விடை எழுதுக. 4 × 4 = 16

37. வாழ்க்கை வளங்களுக்கு உகந்த அடித்தளமாக இந்தியாவில் இருப்பன யாவை ?

38. இல்வாழ்க்கை எப்படி வளர வேண்டும் என மு. வ. வாழ்த்துகிறார் ?

39. சீதக்காதியின் சிறந்த பண்புகள் யாவை ?

40. பெரியாரோடு பிறந்த இரண்டு நல்லுணர்வுகளை விளக்குக.

41. கவிராயருக்குச் சேதுபதி வேந்தர் கலையூரைப் பரிசளிக்கக் காரணம் என்ன ?

42. கல்வி அறிவின் சிறப்புகள் யாவை ?

VIII. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக. 1 × 8 = 8

43. அனந்த கவிராயர் பாட்டுக்கும், பேச்சுக்கும் பரிசு பெற்ற நிகழ்ச்சியைத் தொகுத்தெழுதுக.

44. வ. உ. சி. அவர்களின் செய்ந்நன்றி மறவாப் பண்பினை விளக்கி எழுதுக.

45. ஔவையாருக்கும் செல்வர்களுக்குமிடையே நிகழ்ந்த உரையாடலைச் சுருக்கி எழுதுக.

[ Turn over

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 4 × 1 = 4

46. ஆண்மான் என்னும் பொருள் தரும் சொல் ............. .

அ) கழை

ஆ) களை

இ) கலை.

47. வ. உ. சி. அவர்களுக்கு மீண்டும் வழக்கறிஞர் பதவி கிடைக்க உதவியவர் ............. .

அ) சி. கே. சுப்பிரமணியனார்

ஆ) வாலஸ் துரை

இ) பரலி. சு. நெல்லையப்பர்.

48. 'நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு' என்னும் அறிவியல் உண்மையைக் கண்டுபிடித்தவர் ............. .

அ) நியூட்டன்

ஆ) கலிலியோ

இ) பாஸ்கல்.

49. 'மணிமுடி' எனப் போற்றப்படும் பெரியாரின் பண்பு ............. .

அ) உழைப்பு

ஆ) எல்லோரையும் மதித்தல்

இ) அஞ்சாமை.

X. கீழ்க்காணும் சொற்களுள் எவையேனும் இரண்டினை மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுதுக. 2 × 1 = 2

50. அ) பெருமிதம்

ஆ) எண்ணற்ற

இ) திரும்பத் திரும்ப.